සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

**තෙවන වාර පරීක්ෂණය 2020** — **11 ශ්‍රේණිය**
**மூன்றாம் தவணைப் பரீட்சை 2020** — தரம் **11**
**Third Term Test 2020** — **Grade 11**

**කෘෂි හා ආහාර තාක්ෂණය II**
**விவசாய மற்றும் உணவுத்தொழினுட்பவியல் II**
**Agri & Food Technology II**

පැය දෙකයි
**இரண்டு மணித்தியாலம்**
***Two hours***

- முதலாம் வினா உட்பட மேலும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.

01. சுதேச பயிர்ச் செய்கையை மேம்படுத்துவதற்காக சுகாதார பாதுகாப்பு உணவுப் பயிர்களை அறிமுகப்படுத்துவதில் விவசாயத்துறை முக்கிய பங்காற்றுகின்றது.

i. பயிர்ச் செய்கைக்கான பொருத்தமான மண்ணில் காணப்பட வேண்டிய பௌதீக இயல்புகள் இரண்டு தருக.

ii. பயிர்ச் செய்கையில் பயன்படுத்தக்கூடிய சேதனப் பசளை வகைகள் 2 தருக.

iii. பயிர்ச் செய்கையில் உயர் விளைச்சலைப் பெற, செல்வாக்கு செலுத்தும் காலநிலைக் காரணிகள் இரண்டு தருக.

iv. உமது வீட்டுத்தோட்டத்தில் பப்பாளி மற்றும் வற்றாளை பயிர்களை நட திட்டமிடப்பட்டுள்ளதெனின், அவற்றுக்கு பொருத்தமான பாத்தி வகையை தனித்தனியே குறிப்பிடுக.

v. மிளகாய், கத்தரி, தக்காளி போன்ற பயிர்களை நடுவதற்கு பொருத்தமான நாற்று மேடையை அமைக்கும் போது, நாற்று மேடை ஊடகத்துக்கு பயன்படுத்தும் மூலப்பொருட்களையும் அவற்றின் விகிதத்தையும் தருக.

vi. வீட்டுத் தோட்ட பயிர் செய்கைக்கு பயன்படுத்தக்கூடிய நீர்பாசன முறைகள் இரண்டு தருக.

vii. மேல் நாட்டு வீட்டுத் தோட்டத்தில் கலப்புப் பயிர்ச் செய்கை அதிகளவில் மேற்கொள்ளப்படுகிறது. இப்பயிர்ச் செய்கை முறையின் அனுகூலங்கள் இரண்டை குறிப்பிடுக.

viii. உமது வீட்டுத் தோட்த்தில் தேசிக்காய், லெமன் பயிர்களின் நாற்றுக்களைப் பெற பொருத்தமான பதிவைத்தல் முறையொன்றை படம் வரைந்து காட்டுக.

ix. சூழல் நேய பீடைக்கட்டுப்பாடுகளை மேற்கொள்ளும் போது பயன்படுத்தப்படும் பீடைகளுக்கான இயற்கை எதிரிகள் இரண்டை உதாரணங்களுடன் தருக.

x. போக்குவரத்தின் போது ஏற்படும் அறுவடைக்கு பிந்திய இழப்புக்களை இழிவாக்குவதற்கு மேற்கொள்ளும் முறைகள் இரண்டு தருக.

02. வித்துகள் இன்றி தாவரத்தின் ஏனைய பகுதிகளைக் கொண்டு புதிய தாவரங்களை உருவாக்கும் செயன்முறை இலிங்கமில் இனப் பெருக்கமாகும்.

i. (a) வேர், இலை துண்டங்களினால் இனப்பெருக்கம் செய்யும் பயிர்வகைகள் இரண்டு வீதம் தருக.

(b) தண்டுத் துண்டங்களை விரைவாக வேர் கொள்ளச் செய்யும் முறைகள் இரண்டு தருக.

ii. (a) ஒட்டுதலுக்கு பயன்படுத்தும் ஒட்டுக்கட்டை கொண்டிருக்க வேண்டிய இயல்புகள் இரண்டு தருக.

(b) மாங்கன்று ஒன்றில் ஆப்பு ஒட்டினை மேற்கொள்ளும் முறையை படம் வரைந்து பகுதிகளை பெயரிடுக.

iii. பதிவைத்தலின் அனுகூலங்கள் 4 தருக.

03. பயிர்ச் செய்கையில் போசணைக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய பசளைகள் பயன்படுத்தப்படுகிறது.

i. (a) பயிர்களின் நிலவுகைக்கு அவசியமான நுண்போசணை மூலகங்கள் நான்கினை குறிப்பிடுக.

(b) பொற்றாசியம் குறைபாடு காரணமாக தாவரங்களில் வெளிக்காட்டப்படும் குறைபாட்டு அறிகுறிகள் இரண்டை குறிப்பிடுக.

ii. (a) பயிர்களுக்கு பசளையிடும் முறைகள் நான்கு தருக.

(b) பயிர்களுக்கு இரசாயன பசளைகளை உபயோகிப்பதன் மூலம் ஏற்படும் தீமையான விளைவுகள் இரண்டு தருக.

iii. (a) பசுந்தாட் பசளையாக பயன்படுத்தப்படும் பயிர்வகைகள் இரண்டு தருக.

(b) தமது பண்ணையிலே உற்பத்தி செய்யக்கூடிய சேதனப்பசளைகளில் திரவப் பசளைகளுக்கு இரண்டு உதாரணங்கள் தருக.

04. சரியான முறையில் நிலம் பண்படுத்தல் நீர் பாசன முறைகளை மேற்கொள்வதன் மூலம் சிறந்த விளைச்சலைப் பெற முடியும்.

i. (a) நிலம் பண்படுத்தலின் நோக்கங்கள் இரண்டு தருக.

(b) முதற் பண்படுத்தலில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் இரண்டு தருக.

ii. (a) ஹரோ வகைகள், கைமுள்ளு, கைக்கரண்டி போன்ற உபகரணங்கள் பயன்படுத்தப்படுவது எவ்வகையான பண்படுத்தலுக்காகும்?

(b) இலங்கையில் உலர் வலயத்தில் விவசாயி ஒருவர் சோளம், அவரை, பயிறு போன்ற தானியங்களை பயிரிட நிலம் பண்படுத்தலுக்காக பயன்படுத்தும் சிறந்த உபகரணம் யாது?

iii. (a) நெற்பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தும் சிறந்த நிர்பாசன முறை ஒன்றை குறிப்பிட்டு அதன் அனுகூலங்கள் இரண்டினை குறிப்பிடுக.

(b) நீர் வடிப்பு முறைகள் இரண்டினை குறிப்பிடுக.

05. சிறப்பான அறுவடை ஒன்றினை பெற்றுக்கொள்ள பூச்சிப் பீடைகளை கட்டுப்படுத்துவது மிகவும் முக்கியமாகும். நிலப்பண்படுத்தல் தொடக்கம் அறுவடை வரையான சகல செயற்பாடுகளிலும் பூச்சி பீடைகளின் தாக்கத்தை இழிவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

i. (a) களைகள் வளரும் இடத்தின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு அவற்றுக்கு ஒன்று வீதம் உதாரணம் தருக.

(b) பயிர்ச் செய்கையில் களைகளை கட்டுப்படுத்த பயன்படுத்தப்படும் இரசாயன முறையல்லாத வேறு நான்கு முறைகளை குறிப்பிடுக.

ii. (a) பூச்சிப் பீடைகளினால் பயிர்களுக்கு சேதப்படுத்தும் முறைகள் இரண்டினை குறிப்பிட்டு அவற்றுக்கு உதாரணம் தருக.

(b) சூழல் நேயமுள்ள பீடைக்கட்டுப்பாட்டு முறைகள் இரண்டு தருக.

iii. பழங்கள், மரக்கறி பயிர்களுக்கு உருவாகும் என்திரெக்ஸ் நோயின் நோயறிகுறிகள் இரண்டினை குறிப்பிட்டு அந்நோயை கட்டுப்படுத்தும் முறைகள் இரண்டையும் குறிப்பிடுக.

06. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் அறுவடைக்கு பிந்திய இழப்பு 10% ஆகும். இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் அறுவடைக்கு பிந்திய இழப்புக்கள் 20 – 40% ஆகும். விற்பனை விலையில் அறுவடைக்கு பிந்திய இழப்புக்கள் நேரடியாக செல்வாக்கு செலுத்துகிறது.

i.(a) அறுவடைக்கு பிந்திய இழப்புக்களில் அறுவடைக்கு முன் காரணிகளும் செல்வாக்கு செலுத்துகின்றது. அவ்வாறு செல்வாக்கு செலுத்தும் அறுவடை முன் காரணிகள் இரண்டினை குறிப்பிடுக.

(b) அறுவடைக்கு பிந்திய இழப்புக்களை தடுப்பதன் மூலம் விவசாயி அடையும் நன்மைகள் இரண்டினை குறிப்பிடுக.

ii.(a) அறுவடையை சரியான முறையில் களஞ்சியப்படுத்தப்படாமை காரணமாக ஏற்படும் இழப்புக்கள் 02 தருக.

(b) விற்பனையின் போது அறுவடையின் தரம் குறைவடையும் சந்தரப்பங்கள் 02 தருக.

iii. அறுவடைக்கு பிந்திய இழப்புகளினால் ஏற்படும் நட்டம் நுகர்வோர் மீது சுமத்தப்படும் விதம் பற்றி விளக்குக.

07. பண்ணை உரிமையாளர்கள் பண்ணையிலுள்ள விலங்குகளை அடிக்கடி பரீட்சிப்பதன் மூலம் தங்கள் பண்ணையின் செயற்பாடுகளை சிறப்பான முகாமை செய்யலாம்.

i. பண்ணையில் விலங்குகளில் கீழ் காணப்படும் அறிகுறிகள் தென்படுவதற்கு காரணமாய் அமையும் ஒவ்வொரு காரணம் வீதம் தருக.

(a) கறவைப் பசு கழுத்தை திருப்பிய வண்ணம் தலையில் நடுக்கத்துடன் தரையில் படுத்தவாறு காணப்படல்.

(b) கோழி முட்டைகளின் ஓடு மெல்லியதாக காணப்படல்.

(c) குருதியுன் கூடிய கபில நிற கோழி மலம் காணப்படல்.

(d) குஞ்சுவதியில் கோழிக்குஞ்சுகள் யாவும் ஒரே இடத்தில் ஒன்றாக இருத்தல்.

ii. (a) மாடுகளின் மனைகளில் காணப்பட வேண்டிய நிலமைகள் 03 தருக.

(b) மாட்டு மனையில் ஒரு கறவைப் பசுக்காக ஒதுக்கப்பட வேண்டிய இட அளவு யாது?

iii.(a) கனகூள கோழி வளர்ப்பு முறையில் கனகூளத்துக்காக பயன்படுத்தும் மூலப் பொருட்கள் 03 தருக.

(b) கனகூளமொன்றை தெரிவு செய்யும் போது கவனத்திற்கொள்ள வேண்டிய இயல்புகள் 03 தருக.